பக்கங்கள்:-14+05

# மாலை முரசு

முழக்கம்: 03 | வள்ளுவ ஆண்டு 2058 | சித்திரை 27 ஞாயிற்றுக்கிழமை 10.05.2026 | அதிர்வு 284

## விஜய்க்கு அநுர வாழ்த்துச் செய்தி

### இலங்கை - தமிழக உறவு மேலும் வலுப்படும் என்றும் தெரிவிப்பு



தமிழகத்தின் புதிய முதலமைச்சராகப் பதவி யேற்றுள்ள சி.ஜோசப் விஜய்க்கு இலங்கை 03▶

‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்




# “யோசப் விஜய் எனும் நான்....”

# அரங்கம் அதிர அரியணை ஏறிய முதல்வர் விஜய்!

தமிழக அரசியல் வரலாற்றில் ஒரு புதிய அத்தியாயம் இன்று எழுதப்பட்டுள்ளது. தமிழக வெற்றிக் கழகத்தின் (த.வெ.க.) தலைவர் சி. ஜோசப் விஜய், தமிழகத்தின் 18ஆவது முதலமைச்சராக இன்று பதவியேற்றார். அவருடன் 9 அமைச்சர்களும் பதவியேற்றனர்.

சென்னை நேரு உள்ளக விளையாட்டு அரங்கில் இன்று காலை 10 மணியளவில் பதவியேற்பு விழா தொடங்கியது. “வந்தே மாதரம்...” பாடல் இசைக்க பதவியேற்பு விழா தொடங்கியது. பின்னர் தேசிய கீதம் பாடப்பட்டது. அதன்பின்னர் தமிழ்த் தாய் வாழ்த்துப் பாடப் பட்டது. 02▶






# முதலாம் பக்கத் தொடர்ச்சி

## அரங்கம் அதிர...

இதனையடுத்து தமிழகத்தின் 18 ஆவது முதலமைச்சராக தமிழக வெற்றிக் கழகத்தின் தலைவர் ஜோசப் விஜய் பதவியேற்றுக் கொண்டார். அவருக்கு தமிழக ஆளுநர் இராஜேந்திர விஸ்வநாத் அர்லேகர் பதவிப் பிரமாணமும், இரகசியக் காப்புப் பிரமாணமும் செய்து வைத்தார்.

“சி.ஜோசப் விஜய் எனும் நான்...” என்று விஜய் உறுதிமொழி கூறியபோது அரங்கம் முழுவதும் நிறைந்திருந்த த.வெ.க. தொண்டர்கள் ஆர்ப்பரித்தனர்.

முதலமைச்சர் விஜய்யுடன் புஸ்ஸி என்.ஆனந்த், ஆதவ் அர்ஜுனா, கே.ஜி. அருண்ராஜ், கே.ஏ.செங்கோட்டையன், வெங்கடரமணன், நிர்மல்குமார், ராஜ்மோகன், டி.கே.பிரபு, கீர்த்தனா உள்ளிட்ட 9 பேர் அமைச்சர்களாகப் பதவியேற்றுக் கொண்டனர்.

இந்த நிகழ்வில் காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவர் ராகுல் காந்தி, தமிழக முன்னாள் ஆளுநர் தமிழிசை, கூட்டணி கட்சித் தலைவர்கள், விஜய்யின் பெற்றோர் எஸ்.ஏ.சந்திரசேகர், ஷோபா சந்திரசேகர், நடிகை த்ரிஷா, தயாரிப்பாளர் அர்ச்சனா கல்பாத்தி, விஜய்யின் நண்பர்கள், உறவினர்கள், திரையுலக, அரசியல் பிரமுகர்கள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

சட்டசபைத் தேர்தலில் விஜய்யின் த.வெ.க. 108 இடங்களைக் கைப்பற்றி தனிப்பெரும் கட்சியாக உருவெடுத்தது. எனினும், ஆட்சி அமைக்க 118 இடங்கள் தேவை என்பதால், 10 எம்.எல்.ஏக்களின் ஆதரவு தேவைப்பட்ட நிலையில், அவருக்கு காங்கிரஸ், சி.பி.ஐ., சி.பி.எம். கட்சிகள் ஆதரவளித்தன. வி.சி.க. நேற்று மாலை ஆதரவுக் கடிதத்தை வழங்கியது. தொடர்ந்து ஐ.யூ.எம்.எல். கட்சியும், கடைசி நேரத்தில் த.வெ.கவுக்கு ஆதரவு அளிப்பதாக அறிவித்து கடிதம் வழங்கியது. அதன்படி, த.வெ.கவுக்கு பெரும்பான்மைக்குத் தேவையான 118 இடங்களை விட அதிகமாக ஆதரவு கிடைத்தது.

நேற்று மாலை 6.15 மணிக்கு விஜய்க்குத் தமிழக ஆளுநர் அழைப்பு விடுத்தார். இதையடுத்து, விஜய் ஆளுநர் மாளிகைக்கு வந்தார். ஏற்கனவே அங்கு வந்து காத்திருந்த காங்கிரஸ், இடதுசாரி கட்சிகளைச் சேர்ந்த தலைவர்களுடன் சென்று ஆளுநரை விஜய் சந்தித்தார். அப்போது, 120 எம்.எல்.ஏக்களின் ஆதரவுக் கடிதங்களை ஆளுநரிடம் விஜய் வழங்கினார்.

தொடர்ந்து, அரசமைப்பு சட்டப் பிரிவு 164 இன் கீழ் விஜய்யை முதலமைச்சராக நியமனம் செய்து அதற்கான ஆணையை ஆளுநர் அர்லேகர் வழங்கினார். ஆட்சி அமைக்கவும் விஜய்க்கு அழைப்பு விடுத்தமை குறிப்பிடத்தக்கது.













"புதிய தலைமுறையின் எதிர்பார்ப்பே இந்த வெற்றி"

# தமிழக முதலமைச்சர் விஜய்க்கு ஜீவன் தொண்டமான் வாழ்த்து!

## இந்திய வம்சாவளி மலையக மக்கள் சார்பாகப் பாராட்டு

தமிழகத்தின் புதிய முதலமைச்சராகப் பதவியேற்றுள்ள ச. ஜோசப் விஜய்க்கு இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ஜீவன் தொண்டமான் தனது இதயம் கனிந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

"தமிழக மக்களின் பேராதரவையும் அசைக்க முடியாத நம்பிக்கையையும் பெற்று, முதலமைச்சராகப் பொறுப்பேற்றுள்ள இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க தருணத்தில், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் சார்பிலும், இந்திய வம்சாவளி மலையக மக்கள் சார்பிலும் பாராட்டுக்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

இந்த வெற்றி வெறும் அரசியல் சாதனை மட்டுமல்ல. இது புதிய தலைமுறையின் எதிர்பார்ப்புகள், மக்களின் மாற்றத்துக்கான விருப்பம் மற்றும் ஜனநாயகத்தின் வலிமை ஆகிய வற்றின் வெளிப்பாடாகும்.

தங்களின் தொலைநோக்கு தலைமையின் கீழ், நீதி, சமத்துவம் மற்றும் சமூக ஒற்றுமையுடன் தமிழ்நாடு முன்னேற்றப் பாதையில் பயணிக்கும் என நம்புகின்றேன்.

தமிழகத்தின் முன்னாள் தலைவர்களுடன் எமது சமூக நலன் மற்றும் இருநாட்டு தமிழ் மக்களின் முன்னேற்றம் கருதி உருவாக்கப்பட்ட நட்புறவும் ஒத்துழைப்பும், தங்களின் தலைமையிலும் மேலும் வலுப்பெறும் என்ற உறுதியான நம்பிக்கை எனக்குள்ளது.

மக்கள் நலன், முன்னேற்றம் மற்றும் மனிதநேய ஆட்சி என்ற உயரிய இலக்குகளுடன் தங்களின் நிர்வாகம் தமிழ்நாட்டை உயர்ந்த நிலைக்குக் கொண்டு செல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்." - என்று ஜீவன் தொண்டமான் எம்.பி. தனது வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

தமிழகத்தின் புதிய தலைமைக்கும் மலையகத் தலைமைக்கும் இடையிலான இந்த உறவுப் பாலம், இரு நாட்டுத் தமிழ் மக்களின் நலன்களில் முக்கிய பங்காற்றும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

முதலாம் பக்கத் தொடர்ச்சி

### விஜய்க்கு அநுர...

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தனது மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துள்ளார்.

இது குறித்து ஜனாதிபதி தனது உத்தியோகபூர்வ 'எக்ஸ்' சமூக வலைதளப் பக்கத்தில் வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளதாவது:-

"தமிழக முதலமைச்சராகப் பதவியேற்ற சி. ஜோசப் விஜய்க்கு வாழ்த்துகள். இலங்கையும் தமிழகமும் வரலாறு, கலாசாரம், வணிகம் மற்றும் தலைமுறை தலைமுறையாகத் தொடரும் மக்களுக்கிடையிலான நெருக்கமான உறவுகளால் பிணைக்கப்பட்டுள்ளன.

இலங்கையும் இந்தியாவும் மென்மேலும் நெருக்கமான உறவுகளையும் வலுவான கூட்டாண்மையையும் கட்டியெழுப்பி வரும் நிலையில், எதிர்காலம் மகத்தான பொருளாதார வளர்ச்சியையும் வாய்ப்புகளையும் கொண்டுள்ளது.

வலுவான இந்திய - இலங்கை கூட்டாண்மைக்குள் இணைந்து செயற்படுவதன் மூலம், மேலான செழிப்பையும் முன்னேற்றத்தையும் அடைவதற்கு நான் ஆவலுடன் காத்திருக்கின்றேன்.

உங்களுக்கும் தமிழக மக்களுக்கும் அனைத்து வெற்றிகளும் கிடைக்க இலங்கை மக்கள் சார்பாக எனது வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன்." - என்று ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தனது வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

தமிழகத்தில் ஏற்பட்டுள்ள புதிய அரசியல் மாற்றத்தைத் தொடர்ந்து, அண்டை நாடான இலங்கையின் அரச தலைவர் விடுத்துள்ள இந்த வாழ்த்துச் செய்தி, இரு பிராந்தியங்களுக்கும் இடையிலான உறவில் புதிய மைல்கல்லாகப் பார்க்கப்படுகின்றது.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## அரசியலில் இது சகஜம்

அநுர குமார திஸநாயக்கா, எதிர்க் கட்சிகளின் வரிசையில் இருந்தபோது என்னென்ன விடயங்களுக்கு எல்லாம் எதிராகத் துள்ளிக் குதித்தாரோ அவற்றையெல்லாம் தாம் நிறைவேற்றதிகார ஜனாதிபதிப் பதவியை ஏற்ற பின்னர் வாயை மூடிக்கொண்டு தன்பாட்டில் தானே செய்து தள்ளுகின்றார்.

பொருளாதார நெருக்கடியில் சிக்குண்டு இருந்த இலங்கை நாட்டை மீட்டெடுப்பதற்காக சர்வதேச நாணய நிதியத்துடன் உடன்பாடுகளைச் செய்து, ஒருவாறு சிக்கலில் இருந்து மீள வழி செய்தார் அச் சமயத்தில் நாட்டின் ஜனாதிபதிப் பொறுப்பை ஏற்க முன்வந்த ரணில் விக்கிரமசிங்க.

அந்த உடன்பாட்டை எதிரணியில் இருந்தபடி மோசமாக விமர்சிக்க அநுர குமார திஸநாயக்கா, தாம் பதவிக்கு வந்ததும் அந்த உடன்பாட்டை மாற்றி அமைப்பேன் என்று சூளுரைத்தார்.

ஆனால் பதவியேற்ற பின்னர் வாயை மூடிக் கொண்டு - இன்னும் கொஞ்சம் கொச்சையாகச் சொல்வதானால் வாலைச் சுருட்டிக் கொண்டு - அந்த உடன்படிக்கையை அப்படியே தொடர்கின்றார் அவர்.

அதுவரை காலமும் இருந்த ரணில் விக்கிரமசிங்கவின் பொருளாதாரக் கொள்கைகளை விமர்சித்த அவர், இப்போது அந்தத் தடத்தில் தாமும் தொடர்ந்து பயணிக்கின்றார்.

அப்படி எதிரணியில் இருந்தபடி மோசமாக விமர்சித்த பல விடயங்களை அவர் இப்போது வரிசையாகச் செய்து கொண்டிருக்கிறார்.

அந்த வரிசையில் ஒன்று இலங்கையர்களுக்கான டிஜிட்டல் அடையாள அட்டையைத் தயாரிப்பதை இந்தியக் கம்பெனி ஒன்றின் மூலம் முன்னெடுப்பதற்கான திட்டமாகும்.

எதிரணியில் இருந்த போது இந்திய நிறுவனத்துக்கு அந்தத் திட்டத்தை கையளிப்பதை அவர் மிகக் கடுமையாக எதிர்த்தார். மோசமாக விமர்சித்தார்.

நாட்டு மக்கள் ஒவ்வொருவரினதும் முழு விவரங்களும் - கைவிரல் அடையாளத்திலிருந்து முழு அம்சங்களும் - தேசிய அடையாள அட்டைக்குச் செல்லும் என்பதால் அந்த விடயங்களைக் கையாளும் பொறுப்பை இந்தியாவிடம் ஒப்படைப்பது ஆபத்தானது என்று முழக்கமிட்டவர்கள் இதே ஜே.வி.பியினர் தான்.

உலகம் இன்று தரவுகளின் அடிப்படையில்தான் இயங்குகிறது. மனிதர்கள்பற்றிய தரவுகள் அனைத்தையும் ஒரே இடத்தில் கையளிக்கும் போது கவனமாக இருக்க வேண்டும் என்று சத்தமிட்டவர்கள் இந்த ஜே.வி. பியினர்.

இப்போது எதிரணியில் இருந்து அதிகாரத்திற்கு வந்ததும் - எதிர்க்கட்சி எம்.பியாக இருந்து ஜனாதிபதியானதும் - இந்தியா மீதும் இந்திய நிறுவனங்கள் மீதும், நம்பிக்கையும் மதிப்பும் அவநம்பிக்கையின்மையும் வந்துவிட்டது அநுர குமார திஸநாயக்காவுக்கு.

அதனால்தான் 4,000 கோடி ரூபாவுக்கு மேற்பட்ட இந்த டிஜிட்டல் அடையாள அட்டைகளைத் தயாரித்து வழங்கும் திட்டத்தை இந்திய நிறுவனத்துக்கு வழங்க அவர் முன்வந்திருக்கிறார் போலும்.

நல்ல மாற்றம்தான். இப்படி எதிர்க் கட்சியில் இருந்தபோது கூறியவற்றுக்கு மாறான இன்னும் பல விவகாரங்களை அவர் தொடர்ந்து செய்வார் என்று எதிர்பார்க்க முடியும்.

ஏனென்றால் இதுவெல்லாம் அரசியலில் சகஜமப்பா....!

# மலையகத்தில் மக்கள் புரட்சி வெடிக்கட்டும்

## காணி உரிமைப் போராட்டத்தை மக்கள் மயப்படுத்த முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் வேலு அழைப்பு



மலையக மக்களின் அரசியல், சமூக மற்றும் பொருளாதார விடுதலைக்கு அறவழியில் எழும் மக்கள் எழுச்சியே நிலையான தீர்வைப் பெற்றுத்தரும் என்று முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் கண்டி மாவட்ட காணி உரிமைக்கான தலைவருமான எம்.வேலுகுமார் தெரிவித்தார்.

வெறும் அரசியல் மேடைப் பேச்சுகளால் மட்டும் மாற்றத்தைக் கொண்டு வர முடியாது என்று சுட்டிக்காட்டிய அவர், காணி உரிமைக்கான தெளிவான தீர்வுப் பொறிமுறையை மக்கள் மயப்படுத்த வேண்டிய தருணம் இதுவென்றும் வலியுறுத்தினார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறுகையில்,

“காணி உரிமை பற்றிப் பேசுவது வரவேற்கத்தக்கது. ஆனால், இன்னும் எத்தனை காலம்தான் பேசிக்கொண்டே இருக்கப் போகின்றோம்? இப்போது பேசுவதற்கான நேரமல்ல, திட்டமிட்ட பொறிமுறையின் ஊடாக தீர்வைப் பெறுவதற்கான காலம்.

நாடாளுமன்றத்திலுள்ள மலையகப் பிரதிநிதிகள் தற்போதைய “ட்ரெண்ட்” அரசியலைப் பின் தொடர்வதைத் தவிர்த்து, மக்களின் உண்மையான விடுதலைக்கான அரசியலை முன்னெடுக்க வேண்டும்.

மலையகத்தின் எதிர்காலச் சந்ததியினருக்கு முறையான காணி உரிமையையும், கௌரவமான வாழ்வையும் பெற்றுக்கொடுக்க இளைஞர்களும் சிவில் அமைப்புகளும் அரசியல் வாதிகளுக்குத் தகுந்த அழுத்தங்களைப் பிரயோகிக்க வேண்டும்.

ஜனநாயக ரீதியான அறவழி எழுச்சி ஒன்றே நம் முன்னே இருக்கும் தடைகளைத் தகர்க்கும். மக்களின் இந்த எழுச்சியே மூடியிருக்கும் விடுதலையின் கதவுகளைத் திறக்கும் சாவியாக அமையும்.” – என்றார்.

மலையகப் பகுதிகளில் காணி உரிமை தொடர்பான கோரிக்கைகள் வலுப்பெற்று வரும் சூழலில், வேலுகுமாரின் இந்த அறிக்கை அரசியல் களத்தில் முக்கியத்துவம் பெற்றுள்ளது.

# ‘சொக்லேட்’ வடிவில் கடத்தப்பட்ட 4 கோடி ரூபா பெறுமதியான ‘ஹசீஸ்’

## கட்டுநாயக்க விமான நிலையத்தில் இளைஞர் ஒருவர் கைது



விமான நிலையத்தின் ஊடாகப் பாரியளவிலான ‘ஹசீஸ்’ போதைப் பொருளைக் கடத்தி வர முயன்ற கொழும்பைச் சேர்ந்த இளைஞர் ஒருவர், இன்று ஞாயிற்றுக்கிழமை அதிகாலை பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவினரால் கையும் மெய்யுமாகப் பிடிபட்டார்.

கைது செய்யப்பட்ட 24 வயதுடைய சந்தேகநபர் கொழும்பு, கிராண்ட்பாஸ் பகுதியைச் சேர்ந்தவர் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.


அவரிடமிருந்து கைப்பற்றப்பட்ட போதைப்பொருள் தொகையின் சர்வதேச சந்தைப் பெறுமதி சுமார் 4 கோடியே 77 இலட்சத்து 80 ஆயிரம் ரூபா என மதிப்பிடப்பட்டுள்ளது.

சந்தேகநபர் தனது பயணப் பொதியினுள் மிகவும் சூட்சுமமான முறையில் போதைப்பொருளை மறைத்து வைத்திருந்தார். அதிகாரிகளை ஏமாற்றும் நோக்கில், சொக்லேட் போன்று பொதி செய்யப்பட்ட 15 உறைகளுக்குள் இந்த ‘ஹசீஸ்’ போதைப்பொருள் மறைத்து வைக்கப்பட்டிருந்தமை சோதனையின்போது அம்பலமானது.

கட்டுநாயக்க விமான நிலையத்திலிருந்து வெளியேற முற்பட்ட போதே போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவினர் இவரைக் கைது செய்தனர்.

சந்தேகநபரை நீர்கொழும்பு நீதவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப் பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

இதன்போது, மேற்படி இளைஞரைத் தடுப்புக் காவலில் வைத்து விசாரணைக்கு உட்படுத்துவதற்கான உத்தரவைப் பெற்று, இந்தப் போதைப்பொருள் கடத்தலுக்குப் பின்னால் இருக்கும் ஏனைய நபர்களைக் கண்டறிய மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் முடுக்கிவிட்டுள்ளனர்.



# ஆபத்தான நிலையில் உப்புக்கேணி நிறைவேற்றத் தவறும் வாக்குறுதிகள்!

## விசனம் தெரிவிக்கின்றனர் மக்கள்

(த.சுபேசன்)

சாவகச்சேரி நகரசபை எல்லைக்கு உட்பட்ட கோவிற்குடியிருப்பு தரை வட்டாரத்தில் அமைந்துள்ள உப்புக் கேணிக் குளத்துக்கான பாதுகாப்பு வேலி அமைக்கும் விடயத்தில் உரிய திணைக்களங்கள் தொடர்ந்தும் அசமந்த போக்குக் காட்டிவருகின்றன என்று பொது மக்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

இந்தக் குளமானது வருடக்கணக்கில் பராமரிப்பு எதுவும் இன்றிக் காணப்பட்ட நிலையில் சாவகச்சேரி நகர சபையானது கடந்த மாரி காலத்துக்கு முன்னர் குளத்தைத் தூர்வாரி ஆழப்படுத்தி கொள்ளவை அதிகரித்து கிராம மக்களின் பாராட்டைப் பெற்றிருந்தது.

நகர சபையின் முயற்சியால் கடந்த மாரி மழையின் போது அந்தப் பகுதியில் பாரிய வெள்ள இடர் ஏற்படாமல் குளம் வெள்ள நீரை உள்வாங்கியிருந்தது.

நகர சபையானது குளத்தை ஆழப்படுத்தி ஒருவருட காலத்தை அண்மிக்கின்ற போதிலும் இதுவரை குளத்துக்கான பாதுகாப்பு வேலியை அமைக்காமல் இழுத்தடித்து வருவதால் பொது மக்கள் மற்றும் கால்நடைகள் அபாய நிலைமையிலேயே உப்புக்கேணி வீதி ஊடாக பயணிக்க வேண்டிய நிலைமை காணப்படுகின்றது.

உப்புக்கேணிக் குளமானது உப்புக்கேணி பிரதான பாதையோடு அமைந்துள்ளது. அத்துடன் வீதியின் ஒருபகுதி நீர் வரத்து காரணமாக அரிக்கப்பட்டு மாரி காலத்தில் குளம் எது, வீதி எதுவென்று அடையாளம் காண முடியாத அளவுக்கு அபாய நிலையில் காணப்படும்.

எனவே மாரி காலத்தில் இவ்வாறான அசம்பாவிதங்களை தவிர்க்கும் முகமாக உரிய திணைக்களங்கள் குளத்துக்கான இருபக்க பாதுகாப்பு வேலி அமைக்க உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டுமென பொதுமக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

# உடப்பு பொலிஸ் நிலையத்தில் சாரணர் அணியின் சிரமதானம்

(உடப்பு நிருபர் க.மகாதேவன்)

புத்தளம் தெற்குக் கல்விக் கோட்டத்துக்கு உட்பட்ட ஆண்டிமுனை தமிழ் மகா வித்தியாலயத்தின் ஒரு அங்கமாக இயங்கி வரும் சாரணர் அணியின் சிரமதான நிகழ்வுகள் வெள்ளிக் கிழமை உடப்பு, பொலிஸ் நிலையத்தில் நடைபெற்றன.

இதன்போது அதற்குப் பொறுப்பான ஆசிரியர் ஜனாப் சில்மி உட்பட போக்குவரத்துக்குப் பொறுப்பான பொலிஸ் அதிகாரியும் கலந்து கொண்டார்.











# மலையக பெருந்தோட்ட பாடசாலை ஆசிரியர்களின் நினைவு ஒன்று கூடல்

(நடராஜா மலர்வேந்தன்)

மலையக பெருந்தோட்ட பாடசாலை கல்வி அபிவிருத்தித் திட்டத்தின் கீழ், 1986ஆம் ஆண்டு முதல் ஆசிரிய மாணவர்களாக தெரிவு செய்யப்பட்டு, இரண்டு ஆண்டுகள் பயிற்சி பெற்ற பின்னர் நடைபெற்ற பரீட்சையில் தேர்ச்சி பெற்ற 101 பேருக்கு 1988.09.20 அன்று ஆசிரிய நியமனம் வழங்கப்பட்டது.

அந்த வரலாற்றுச் சிறப்புமிக்க நியமனத்தை நினைவு கூரும் வகையில், நேற்று பதுளையில் நினைவு ஒன்று கூடல் நிகழ்வு நடைபெற்றது. இந்த நிகழ்வில் மொத்தம் 46 பேர் கலந்து கொண்டு, தங்கள் பழைய நினைவுகளை பகிர்ந்து கொண்டனர்.

இந்த ஒன்றுகூடலில் ஓய்வு பெற்ற அதிபர்கள், தற்போது பணியில் உள்ள அதிபர்கள் மற்றும் ஆசிரியர்களும் கலந்து கொண்டனர். மேலும், ஆசிரியர் தொழிலிலிருந்து விலகி தற்போது வழக்கறிஞராகவும், பதில் நீதிபதியாகவும் பணியாற்றி வரும் ரமேஷ்குமாரும் கலந்து கொண்டார்.

இந்நிகழ்வு கடந்த கால சேவைகளை நினைவு கூருவதாக அமைந்தது. இது மட்டுமல்லாமல், ஆசிரியர்களின் அர்ப்பணிப்பு மற்றும் சமூகத்துக்கான பங்களிப்பை மீண்டும் வலியுறுத்தும் வகையிலும் அமைந்தது. இவர்களின் அர்ப்பணிப்புமிக்க சேவையால் மலையக கல்வி அபிவிருத்தியில் கணிசமான மாற்றங்கள் ஏற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ஐஸ் ஹெரோயின் போதைப்பொருள் கடத்தல் குழு காரைதீவில் மாட்டியது

(பாறுக் ஷிஹான்)

நீண்ட காலமாக சூட்சுமமாக கடல் மற்றும் தரை வழியாக ஐஸ் மற்றும் ஹெரோயின் போதைப்பொருள் கடத்தலில் ஈடுபட்ட குற்றச்சாட்டின் அடிப்படையில் இரண்டு சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்று சனிக்கிழமை இரவு அம்பாறை மாவட்டம் காரைதீவு பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட புறநகர் பகுதியில் உள்ள சந்தேகத்துக்கு இடமான வீடு ஒன்றில் இடம்பெற்ற சோதனை நடவடிக்கையின் போது இரண்டு சந்தேக நபர்களையும் அம்பாறை மாவட்ட ஊழல் தடுப்புப் பிரிவின் பொறுப்பதிகாரி உப பொலிஸ் பரிசோதகர் கே.ஏ.எம்.பிரியங்கர தலைமையிலான குழுவினர் கைது செய்துள்ளனர்.

கைதான சந்தேக நபர்களில் கடற்குதிரை என பட்டப்பெயருடன் அழைக்கப்படும் சந்தேக நபரிடம் இருந்து 50 கிராம் ஐஸ் போதைப் பொருளும் மற்றுமொரு சந்தேக நபரிடம் இருந்து 20 கிராம் 100 மில்லி கிராம் ஐஸ் போதைப் பொருள் 5 கிராம் 250 மில்லி கிராம் ஹெரோயின் போதைப்பொருளும் மீட்கப்பட்டன.

இந்தக் கடத்தல் நடவடிக்கையில் ஈடுபட்ட ஸ்கூட்டர் வகை மோட்டார் சைக்கிள், 80 ஆயிரம் ரூபா பணம், இலத்திரனியல் தராசு, நவீன கைத்தொலைபேசிகள் என்பன சோதனை நடவடிக்கையின் போது மீட்கப்பட்டுள்ளன.

அம்பாறை மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் நேரடி கண்காணிப்பில் இயங்கும் அம்பாறை மாவட்ட குற்றப் புலனாய்வு பிரிவு உப பொலிஸ் பரிசோதகர் கே.ஏ.எம்.பிரியங்கரவுக்குக் கிடைக்கப்பெற்ற தகவல் ஒன்றுக்கு அமைய சோதனை நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.



இந்தச் சந்தேதக நபர்கள் புத்தளம், மன்னார் மாவட்டங்களில் இருந்து தரை மற்றும் கடல் வழியாக போதைப் பொருள்களை கடத்தி விற்பனை செய்பவர்கள் என விசாரணை அதிகாரிகள் தெரிவித்தனர்.

சந்தேக நபர்கள் காரைதீவு பகுதியில் வாடகை அடிப்படையில் வீடு ஒன்றை பெற்று இக்கடத்தல் செயற்பாட்டில் ஈடுபட்டுள்ளமை மேலதிக விசாரணையில் கண்டறியப்பட்டுள்ளது. கைதான இரு சந்தேக நபர்களும் முரணான வாக்கு மூலங்களை ஏற்கனவே பொலிஸாருக்கு வழங்கி விசாரணைகளை திசை திருப்ப முயன்றுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் கைதான சந்தேக நபர்கள், சான்றுப் பொருள்களுடன் காரைதீவு பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.



# வித்தகர், இளங்கலைஞர் விருது பெற்றோர் மருதம் கலைக்கூடத்தினரால் கௌரவிப்பு!

(நூருல் ஹுதா உமர்)

மருதம் கலைக்கூடல் மன்றத்தின் மாதாந்த அமர்வு சனிக்கிழமை இரவு சாய்ந்தமருது ஜீ.எம்.எம்.எஸ். வித்தியாலய கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. இந்த நிகழ்வு அமைப்பின் தலைவர் கலைஞர் அஸ்வான் எஸ். மௌலானா தலைமையில் இடம்பெற்றது.

நிகழ்வில் சாய்ந்தமருது கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர் ரஸ்மி மூஸா, ஓய்வுபெற்றஅதிபர்யூ.எல்.நஸார், கலாசார மத்திய நிலைய பொறுப்பதிகாரி ஏ.எம். நௌசாத் உள்ளிட்ட கலை, இலக்கிய மற்றும் சமூக ஆர்வலர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

இதன்போது கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களம் நடத்திய கலாசார விழாவில் 2025 ஆம் ஆண்டுக்கான "வித்தகர் விருது" பெற்ற ஓய்வு பெற்ற கலாசார உத்தியோகத்தரும் எழுத்தாளருமான எம்.ஐ. அஸ்ரப், "இளம் கலைஞர் விருது" பெற்ற சிரேஷ்ட அறிவிப்பாளர் ஏ.ஆர்.எம். நௌபீல் ஆகியோரும் கௌரவிக்கப்பட்டனர்.

கலை மற்றும் கலாசார துறைகளில் இவர்களின் நீண்டகால பங்களிப்புகள் பாராட்டப்பட்டன. இளம் தலைமுறைக்கு முன்மாதிரியாகத் திகழ்வதாகவும் நிகழ்வில் கருத்துகள் வெளியிடப்பட்டன.

கலை மற்றும் இலக்கிய செயற்பாடுகளை சமூக மட்டத்தில் வலுப்படுத்தும் நோக்கில் மருதம் கலைக்கூடல் மன்றம் முன்னெடுத்துவரும் பணிகள் தொடர்பாகவும் கலந்துரையாடல்கள் இடம்பெற்றன. நிகழ்வு கலாசார மற்றும் கலை ஆர்வலர்களின் பங்கேற்புடன் இடம்பெற்றது.




# கற்பிட்டி கண்டக்குளியில் சட்டவிரோத பீடி இலைகள், கிருமிநாசினிகள் மீட்பு!







(கற்பிட்டி எம். எச். எம். சியாஜ்)

கடல் மார்க்கமாக இலங்கைக்கு சட்டவிரோதமான முறையில் கொண்டுவரப்பட்ட பெரும் அளவிலான கிருமிநாசினிகள், விதைகள் மற்றும் பீடி இலைகள் என்பன கைப்பற்றப்பட்டுள்ளன என்று பொலிஸ் விசேட அதிரடிப்படை தெரிவித்துள்ளது.

விமானப்படை புலனாய்வு பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவலையடுத்து, கற்பிட்டி – கண்டக்குளி விசேட அதிரடிப்படை முகாம் அதிகாரிகளால் இந்த சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டது.

கண்டக்குளிபகுதியில்முன்னெடுக்கப்பட்ட இந்த நடவடிக்கையின் போதே குறித்த பொருள்கள் மீட்கப்பட்டுள்ளன.

இந்த சம்பவம் தொடர்பாக இதுவரை எவரும் கைது செய்யப்படவில்லை. கைப்பற்றப்பட்ட கிருமிநாசினிகள், விதைகள் மற்றும் பீடி இலைகள் மேலதிக விசாரணைகளுக்காகப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

மேலதிக விசாரணைகளை கற்பிட்டி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



# ஹட்டன் - மஸ்கெலியா வீதி தாழிறங்கி 6 மாதங்களாகியும் நடவடிக்கை இல்லை!

## விசனம் தெரிவிக்கின்றனர் மக்கள்

(மஸ்கெலியா நிருபர்)

ஹட்டன் – மஸ்கெலியா பிரதான சாலையில் டிக்கோயா வனராஜா தேயிலை தொழிற்சாலை அருகில் கடந்த டிட்வா புயலின் போது பிரதான சாலை தாழ் இறங்கியது.

தாழ் இரக்கம் நிலவி ஆறு மாதங்கள் கடந்து போதிலும் நோர்வூட் பிரதேச வீதி அபிவிருத்தி அதிகார சபை எந்த ஒரு நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என இந்தப் பிரதேச மக்களும் வாகன சாரதிகளும் புகார் தெரிவித்துள்ளனர்.

இது குறித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மற்றும் வீதி அபிவிருத்தி அமைச்சும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தெரிவித்துள்ளனர்.

# தலைமன்னார் வீதியில் விபத்து பனை மரத்துடன் மோதிய மினிபஸ்!

**(மன்னார் நிருபர்)**

மன்னார் – தலைமன்னார் பிரதான வீதியில் இன்று இடம்பெற்ற விபத்தில் தனியார் நிறுவனம் ஒன்றில் பணியாற்றும் தொழிலாளர்கள் 9 பேர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

தலைமன்னார் வீதியில் அமைந்துள்ள கரிசல் பகுதியில் இன்று காலை மினி வான் ஒன்று பயணித்துக் கொண்டிருந்த போது, திடீரென கட்டுப்பாட்டை இழந்து வீதியை விட்டு விலகி அருகில் இருந்த பனை மரம் ஒன்றுடன் பலமாக மோதியுள்ளது.

இந்த விபத்து இடம்பெற்ற போது வாகனத்தில் தனியார் நிறுவனம் ஒன்றில் கடமைக்காக சென்று கொண்டிருந்த தொழிலாளர்களே இருந்துள்ளனர்.

விபத்தில் சிக்கி காயங்களுக்கு உள்ளாகிய 9 பேரும் மீட்கப்பட்டு, உடனடியாக மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

விபத்து தொடர்பில் மன்னார் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.





# ஆனந்த், ஆதவ் உள்ளிட்ட 9 அமைச்சர்கள் பதவியேற்பு

முதல்வர் விஜய்யுடன் ஆனந்த், ஆதவ் அர்ஜுனா, செங்கோட்டையன் உள்ளிட்ட 9 அமைச்சர்கள் பதவியேற்றுக் கொண்டனர்.

சென்னை நேரு உள்விளையாட்டு அரங்கில் இன்று காலை 10 மணியளவில் வந்தே மாதரம் பாடல் இசைக்க பதவியேற்பு விழா தொடங்கியது. பின்னர் தேசிய கீதம் பாடப்பட்டது, 3 ஆவதாகவே தமிழ்த் தாய் வாழ்த்து பாடப்பட்டது.

இதனையடுத்து தமிழகத்தின் 18 ஆவது முதல்வராக தமிழக வெற்றிக் கழகத்தின் தலைவர் சி.ஜோசப் விஜய் பதவியேற்றுக் கொண்டார். அவருக்கு ஆளுநர் அர்லேகர் பதவிப் பிரமாணமும், ரகசியக் காப்புப் பிரமாணமும் செய்து வைத்தார்.

விஜய்யை தொடர்ந்து 9 அமைச்சர்கள் பதவியேற்றுக் கொண்டனர். த.வெ.க பொதுச் செயலாளர் புஸ்ஸி என்.ஆனந்த், ஆதவ் அர்ஜுனா, கே.ஜி. அருண்ராஜ், கே.ஏ.செங்கோட்டையன், வெங்கடரமணன், நிர்மல்குமார், ராஜ்மோகன், டி.கே.பிரபு, கீர்த்தனா உள்ளிட்டோருக்கு ஆளுநர் பதவிப் பிரமாணம் செய்து வைத்தார். பதவியேற்புக்குப் பிறகு அமைச்சர்கள் அனைவருக்கும் முதல்வர் விஜய் கைக்குலுக்கி வாழ்த்து தெரிவித்தார்.

பதவியேற்றுக் கொண்ட அமைச்சர்களுக்கான இலாக்கா ஒதுக்கீடு பற்றிய அறிவிப்பு இன்று மாலை வெளியாகும் என்று தெரிகிறது.

# 200 யூனிட் இலவச மின்சாரம் வழங்கல்; முதல்வர் விஜய்யின் முதல் கையெழுத்து

தமிழக முதல்வராகப் பதவியேற்றுக் கொண்ட சி.ஜோசப் விஜய், வீடுகளில் 2 மாதங்கள் 500 யுனிட் பயன்படுத்துபவர்களுக்கு 200 யுனிட் வரை இலவச மின்சாரம் உள்ளிட்ட திட்டங்களுக்கான கோப்புகளில் கையெழுத்திட்டார்.

சென்னை நேரு உள்விளையாட்டு அரங்கில் இன்று காலை 10 மணிக்கு தமிழகத்தின் 18 ஆவது முதல்வராக தமிழக வெற்றிக் கழகத்தின் தலைவர் சி.ஜோசப் விஜய் பதவியேற்றுக் கொண்டார்.



இதனையடுத்து பதவியேற்றுக் கொண்ட கையோடு முதல்வர் விஜய், மூன்று முக்கிய அறிவிப்புகளுக்கான கோப்புகளில் மேடையிலேயே கையெழுத்திட்டார்.

தனது தேர்தல் அறிக்கையில் இடம் பெற்ற முக்கிய வாக்குறுதிகளான, வீடுகளில் 2 மாதங்கள் 500 யுனிட் பயன்படுத்துபவர்களுக்கு 200 யுனிட் வரை இலவச மின்சாரம், பெண்களின் பாதுகாப்பை உறுதி செய்யும் நோக்கில் 'சிங்கப்பெண் அதிரடிப்படை' திட்டம், போதைப் பொருள் புழக்கத்தை தடுக்கும் வகையில் ஒவ்வொரு மாவட்டத்திலும் போதை பொருள் தடுப்புப் படை திட்டம் உள்ளிட்ட திட்டங்களில் கையெழுத்திட்டார்.




# கோப்புகளில் கையெழுத்து; அதிகாரிகளுடனும் சந்திப்பு

புதிய முதல்வராக பொறுப்பேற்ற பின்னர் விஜய் தலைமைச் செயலகத்துக்கு சென்றார். அங்கு முதல்வருக்கான இருக்கையில் அமர்ந்து கோப்புகளில் கையெழுத்திட்டு அலுவல்களை தொடங்கினார். அவருக்கு தமிழக அரசின் உயர் அதிகாரிகள் வாழ்த்து தெரிவித்தனர்.

தலைமைச் செயலகத்தில் முதல்வர் விஜய்யுடன் அமைச்சர்கள் செங்கோட்டையன், புஸ்ஸி ஆனந்த் உள்ளிட்ட அமைச்சர்கள் உடனிருந்தனர்.

நாளை சட்டப்பேரவை கூடவுள்ள நிலையில், புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட எம்.எல்.ஏக்களுக்கு தற்காலிக சபாநாயகர் பதவிப் பிரமாணம் செய்து வைத்தார். தற்காலிக சபாநாயகராக சோழவந்தான் தொகுதி எம்.எல்.ஏ. கருப்பையா நியமிக்கப்பட்டுள்ளார்.

# மக்கள் நலன் காக்க விஜய்யின் அரசுக்கு பா.ம.க. முழுமையான ஆதரவு அளிக்கும்

## அன்புமணி தெரிவிப்பு





மக்கள் நலன் காப்பதற்கான விஜய் அரசின் அனைத்து நடவடிக்கைகளுக்கும் பாட்டாளி மக்கள் கட்சி அதன் முழு ஆதரவை அளிக்கும் என்று பா.ம.க தலைவர் அன்புமணி ராமதாஸ் கூறியுள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

“தமிழ்நாட்டின் முதல்வராக தவெக தலைவர் விஜய், அவருடன் 9 பேர் கொண்ட அமைச்சரவையும் இன்று பொறுப்பேற்றுக் கொண்டிருக்கிறது. புதிய முதல்வருக்கும், அவரது அமைச்சரவை சகாக்களுக்கும் எனது உளமார்ந்த வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ்நாட்டில் ஆட்சிக்கு வந்திருப்பது எந்தக் கட்சியாக இருந்தாலும், ஆட்சியாளர்களைத் தேர்ந்தெடுத்த மக்களின் நோக்கமும், எதிர்பார்ப்பும் ஒன்று தான். எந்த வகையான போதையும் இல்லாத, பெண்களும், குழந்தைகளும் பாதுகாப்பாகவும், நிம்மதியாகவும் வாழக்கூடிய, இளைஞர்களுக்கு தரமான கல்வியும், வேலை வாய்ப்பும் வழங்கக்கூடிய, உழவர்களின் வருமானத்தையும், வாழ்க்கைத் தரத்தையும் உயர்த்தக் கூடிய, அடித்தட்டு மக்களின் வாழ்க்கையை மேம்படுத்தக் கூடிய, அரசு ஊழியர்களின் கோரிக்கைகளை நிறைவேற்றக் கூடிய, இவை அனைத்துக்கும் மேலாக சமூக நீதியை பாதுகாக்கக் கூடிய அரசு அமைய வேண்டும் என்பது தான் அது. இந்த எதிர்பார்ப்புகளை நிறைவேற்ற புதிய அரசு தீவிரமாக முயல வேண்டும்.

த.வெ.கவின் தேர்தல் அறிக்கையில் இடம் பெற்றுள்ள முதல் வாக்குறுதியை நிறைவேற்றுவதற்கான ஆணையில் புதிய முதல்வர் முதல் கையெழுத்திட வேண்டும் மற்ற வாக்குறுதிகளையும் விரைந்து நிறைவேற்ற வேண்டும். மக்கள் நலன் காப்பதற்கான விஜய் அரசின் அனைத்து நடவடிக்கைகளுக்கும் பாமக அதன் முழு ஆதரவை அளிக்கும் அரசின் தவறுகளை சுட்டிக்காட்டுவதிலும், அந்தத் தவறை திருத்தச் செய்வதிலும் பொறுப்புள்ள, ஆக்கப்பூர்வமான எதிர்க்கட்சியாக பாமக செயல்படும்.” என்று குறிப்பிட்டுள்ளார்.



# தமிழக அரசின் இப்போதைய நிலை குறித்து வெள்ளை அறிக்கையை வெளியிடுவேன்!

## முதல்வர் விஜய் முதல் உரை

“தமிழக அரசுக்கு இன்று 10 லட்சம் கோடி இந்திய ரூபாவுக்கு மேல் கடன் உள்ளது. அரசின் கஜானாவை சுத்தமாக துடைத்து வழித்து வைத்து விட்டு சென்றுள்ளார்கள். தூக்க முடியாத சுமையை ஏற்றி வைத்துவிட்டு சென்றுள்ளார். அந்த நிலையில்தான் இந்த பொறுப்பை ஏற்றுள்ளேன். உள்ளே போய் பார்த்துவிட்டு, தற்போதைய தமிழக அரசு இப்போது என்ன நிலையில் உள்ளது என்பதை ஒரு வெள்ளை அறிக்கையாக வெளியிடுவேன்.”

– இவ்வாறு தமிழக முதல்வர் விஜய் தெரிவித்தார்.

பதவியேற்பு விழாவை தொடர்ந்து 3 முக்கிய கோப்புகளில் கையொப்பமிட்ட பின்னர் முதல்வர் விஜய் உரையாற்றுகையில்,

“சினிமாவில் ஒரு சாதாரண உதவி இயக்குநரின் மகன் தான் நான். எனக்கு வாழ்க்கையில் வறுமை, பசி என்றால் என்னவென்று தெரியும். நான் மன்னர் பரம்பரையில் இருந்து வந்தவன் அல்ல. நான் உங்கள் குடும்பத்தில் ஒருவன் தான். நீங்களும் என்னை அப்படி நினைத்ததால் தான், என்னை வெற்றி பெறவைத்துள்ளீர்கள்.

இந்த பயணத்தில் எனக்கு பல அவமானங்கள் நடந்தது, அதுபோல உங்களுக்கும் நடந்தது. ஆனால் என்கூடவே நின்றீர்கள். நான் ஒன்றும் தேவதூதன் கிடையாது. ஒரு இயல்பான வாழ்க்கை வாழும் மனிதன் தான். சாத்தியமற்ற வாக்குறுதிகளை கொடுத்து ஏமாற்ற மாட்டேன். எது சாத்தியமோ அந்த வாக்குறுதிகளையே நான் சொல்வேன்.

இத்தனை கோடி மக்கள் என் கூட இருக்கும்போது என்ன வந்தாலும் பார்த்துக் கொள்ளலாம் என்ற நம்பிக்கை உள்ளது. தமிழக அரசுக்கு இன்று 10 லட்சம் கோடி இந்திய ரூபாவுக்கு மேல் கடன் உள்ளது. அரசின் கஜானாவை சுத்தமாக துடைத்து வழித்து வைத்து விட்டுச’ சென்றுள்ளார்கள். தூக்க முடியாத சுமையை ஏற்றி வைத்துவிட்டு சென்றுள்ளார். அந்த நிலையில்தான் இந்த பொறுப்பை ஏற்றுள்ளேன். உள்ளே போய் பார்த்தால் தான் என்ன இருக்கிறது, என்ன இல்லை எனத் தெரியும். உள்ளே போய் பார்த்துவிட்டு, தற்போதைய தமிழக அரசு இப்போது என்ன நிலையில் உள்ளது என்பதை ஒரு வெள்ளை அறிக்கையாக வெளியிடுவேன்.

நான் யாரையும் மறைமுகமாக, முகத்தை மூடிக்கொண்டு சந்திக்க மாட்டேன். எல்லாவற்றையும் வெளிப்படையாக செய்வேன். அதே நேரத்தில் எனது வாக்குறுதிகளை நிறைவேற்ற நீங்கள் எனக்கு அவகாசம் கொடுக்க வேண்டும். அனைத்து வாக்குறுதிகளையும் நிறைவேற்றுவேன். பெண்களுக்கான பாதுகாப்பை கண்டிப்பாக உறுதி செய்வேன், போதைப்பொருள் கலாச்சாரத்தை ஒழிக்க நடவடிக்கை எடுப்பேன், நமது பசங்களை காப்பாற்ற வேண்டியது நம் பொறுப்பு. சட்டம் ஒழுங்கை கண்டிப்பாக உறுதி செய்வேன். என்னை அவமானப்படுத்தியவர்களுக்கும், 8 கோடி மக்களுக்கும் பாதுகாப்பு வழங்குவேன்.

கல்வி, மருத்துவம், குடிதண்ணீர், வீதி, ரேஷன் போன்ற அடிப்படை பிரச்சினைகளில் முழு முதல் கவனம் செலுத்துவேன். நான் மக்கள் பணத்திலிருந்து ஒரு ரூபாய் கூட எடுக்க மாட்டேன். எனக்கு அந்த அவசியம் இல்லை. அதுபோல நான் யாரையும் தப்பு செய்யவும் விட மாட்டேன். எனது அரசில் யாரும் தவறு செய்ய விடமாட்டேன். ஜெயித்துவிட்டோம் என ஒரு ஆட்டம் ஆடிப்பார்க்கலாம் என்ற என்னம் இருந்தால், அதனை உடனே மறந்துவிடுங்கள். என் அரசில் ஒரே அதிகார மையம்தான், அது நான் தான். பல அதிகார மையங்கள் இங்கே கிடையாது. பெண்கள், விவசாயிகள் உட்பட அனைத்து மக்களும் நம் அரசின் நன்றாக இருப்போம். சிறுபான்மையினருக்காக நமது அரசு எப்போதும் துணை நிற்கும். இந்து, முஸ்லிம், கிறித்துவர்களுக்கான முகம் தான் இந்த விஜய்யின் முகம்.

முக்கியமாக இந்த விஜய் மாமாவின் குட்டி நண்பா, நண்பிகளுக்கு நன்றி. அவர்களால் தான் இந்த விஷயம் நடந்துள்ளது. அவர்களின் எதிர்காலத்துக்காக திட்டங்களை நிறைவேற்றுவேன். தவெக தோழர்களுக்கு நன்றி. வாருங்கள் அனைவரும் சேர்ந்து ஒரு புதிய அத்தியாயத்தை தொடங்குவோம்.

மக்கள் நலனை மட்டுமே பிரதானமாக கொண்ட நம் அரசுக்கு ஆதரவு வழங்கிய காங்கிரஸ் கட்சியின் ராகுல் காந்தி, வேணுகோபால், பிரவீன் சக்கரவர்த்தி, சிபிஎம் கட்சியின் தேசிய பொதுச் செயலாளர் எம்.ஏ.பேபி, பெ.சண்முகம், வி.சி.க. தலைவர் திருமாவளவன், ரவிக்குமார், வன்னியரசு, சி.பி.ஐ. தேசிய செயலாளர் டி.ராஜா, மாநில பொதுச் செயலாளர் வீரபாண்டியன், ஐ.யு.எம்.எல். காதர் மொய்தீன், நவாஸ் கனி அனைவருக்கும் நன்றி. நம்பிக்கையோடு இருங்கள். நல்லதே நடக்கும்.” – என்றார்.

# ஹோர்முஸ் நீரிணைப் பகுதியில் நிலவும் இனம்புரியாத அமைதி!

## ஈரானின் பதிலை எதிர்பார்க்கும் அமெரிக்கா



கடந்த சில நாட்களாக நீடித்த மோதல்களுக்குப் பிறகு, சனிக்கிழமை அன்று ஹோர்முஸ் நீரிணைப்பகுதியில் ஓரளவு அமைதி நிலவியது.

இந்தநிலையில் போர்நிறுத்தம் மற்றும் அமைதிப் பேச்சுவார்த்தையைத் தொடங்குவது தொடர்பாக அமெரிக்கா வழங்கிய சமீபத்திய முன்மொழிவுக்கு ஈரானிடம் இருந்து பதில் வரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஈரானின் பதிலுக்காகச் சில மணி நேரங்கள் மட்டுமே காத்திருப்பதாக அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சர் மார்கோ ரூபியோ வெள்ளிக்கிழமை தெரிவித்திருந்தார்.

இருப்பினும், சனிக்கிழமை மாலை வரை தெஹ்ரானிடமிருந்து எந்தவொரு அதிகாரப்பூர்வமான பதிலும் கிடைக்கவில்லை.

போரின் தொடக்கத்திற்குப் பிறகு முதல் முறையாக, கட்டாரின் திரவமாக்கப்பட்ட இயற்கை எரிவாயு தாங்கிக் கப்பல் ஒன்று ஹோர்முஸ் வழியாக பாகிஸ்தானை நோக்கிப் பயணிக்கிறது.

ஈரானின் அனுமதியுடன் நடைபெறும் இப்பயணம், மத்தியஸ்தராகச் செயல்படும் பாகிஸ்தான் மற்றும் கட்டாருடன் நல்லெண்ணத்தை வளர்க்கும் முயற்சியாகக் கருதப்படுகிறது.

அமெரிக்க ஜனாதிபதி அடுத்த வாரம், டொனால்ட் ட்ரம்ப் சீனாவுக்குப் பயணம் மேற்கொள்ளவுள்ள நிலையில், உலகப் பொருளாதாரத்தைப் பாதிக்கும் இந்தப் போரை முடிவுக்குக் கொண்டு வர சர்வதேச அளவில் அழுத்தம் அதிகரித்து வருகிறது.

ஏப்ரல் 7 அன்று அறிவிக்கப்பட்ட போர்நிறுத்தம் அமுலில் இருப்பதாக ட்ரம்ப் கூறினாலும், களத்தில் மோதல்கள் நீடிக்கின்றன.

ஹோர்முஸ் ஜலசந்தியில் அமெரிக்கக் கப்பல்களுக்கும் ஈரானியப் படைகளுக்கும் இடையே அவ்வப்போது துப்பாக்கிச் சூடு சம்பவங்கள் நிகழ்கின்றன.

ஈரானியத் துறைமுகத்திற்குள் நுழைய முயன்ற இரண்டு கப்பல்கள் மீது அமெரிக்க விமானங்கள் தாக்குதல் நடத்தி அவற்றைத் திருப்பி அனுப்பியுள்ளன.

ஈரானிலிருந்து ஏவப்பட்ட இரண்டு ஏவுகணைகள் மற்றும் மூன்று ஆளில்லா விமானங்களை தனது வான்பாதுகாப்புப் படைகள் இடைமறித்து அழித்தன என்று அமீரகம் தெரிவித்துள்ளது.

இதற்கிடையில், ஈரான் வெளியுறவுத்துறை அமைச்சர் அப்பாஸ் அரக்ச்சி, அமெரிக்காவே வேண்டுமென்றே இராணுவத் தாக்குதல்களை நடத்தி அமைதிக்கான வாய்ப்புகளைச் சீர்குலைப்பதாகக் குற்றம் சாட்டியுள்ளார்.

அமைதிப் பேச்சு முயற்சிகளுக்கு மத்தியில், ஈரான் மீதான அழுத்தத்தை அதிகரிக்க அமெரிக்கா புதிய தடைகளை விதித்துள்ளது.

குறிப்பாக ஈரானின் ‘ஷாஹெட்’ ஆளில்லா வானூர்திகளை தயாரிக்கத் தேவையான மூலப்பொருட்கள் மற்றும் ஆயுதங்களை வழங்க உதவிய சீன மற்றும் ஹொங்காங்கைச் சேர்ந்த 10 நிறுவனங்கள் மற்றும் தனிநபர்கள் மீது அமெரிக்க திறைசேரி தடைகளை விதித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# எண்ணெய்க் கப்பல்கள் தாக்கப்பட்டால் அமெரிக்கத் தளங்கள் மீது தாக்குதல்

## ஈரான் எச்சரிக்கை

ஈரானிய எண்ணெய் தாங்கிக் கப்பல்கள் அல்லது வணிகக் கப்பல்கள் மீது ஏதேனும் தாக்குதல் நடத்தப்பட்டால், பிராந்தியத்தில் உள்ள அமெரிக்க இராணுவத் தளங்கள் மற்றும் கடற்படைக் கப்பல்கள் மீது பாரிய தாக்குதல் நடத்தப்படும் என ஈரானின் இஸ்லாமிய புரட்சிகர காவல்படை கடற்படைத் தலைமையகம் எச்சரித்துள்ளது.


ஈரானின் அரசு நடத்தும் ‘ஐரிப்’செய்தி நிறுவனம் இந்தத் தகவலை வெளியிட்டுள்ளது.

“ஈரானியக் கப்பல்கள் மீதான எந்தவொரு தாக்குதலுக்கும், அமெரிக்கத் தளங்கள் மற்றும் எதிரிக் கப்பல்கள் மீதான பரந்த அளவிலான தாக்குதலே பதிலாக அமையும்” என்று புரட்சிக்கர கடற்படை கட்டளையகம் தெரிவித்துள்ளது.

ஹோர்முஸ் நீரிணைப்பகுதியில் ஈரானிய மற்றும் அமெரிக்கப் படைகளுக்கு இடையே அவ்வப்போது சிறிய அளவிலான மோதல்கள் மற்றும் துப்பாக்கிச் சூடு சம்பவங்கள் நிகழ்ந்து வருவதால் இந்தப் பகுதியில் கடும் பதற்றம் நிலவுகிறது.

எனினும், இந்த மோதல்களுக்கு மத்தியிலும், அமெரிக்காவிற்கும் ஈரானுக்கும் இடையிலான போர்நிறுத்த ஒப்பந்தம் இன்னும் அமுலில் இருப்பதாக அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

ஈரான் மீதான அமெரிக்காவின் தாக்குதல்கள் மற்றும் ஈரானின் இந்த பதிலடி எச்சரிக்கைகள் காரணமாக சர்வதேச அளவில் கச்சா எண்ணெய் விநியோகம் பாதிக்கப்படலாம் என்ற அச்சம் எழுந்துள்ளது.







# ரஷ்யாவில் வெற்றி தினக் கொண்டாட்டம்: எளிமையாக நடந்த இராணுவ அணிவகுப்பு

## புடின் பங்கேற்று எழுச்சியுரை

2 ஆம் உலகப் போரில் ஜேர்மனியை வீழ்த்தியதன் நினைவாக, ரஷ்யாவில் நேற்று சனிக்கிழமை ‘வெற்றி தினம்’ கொண்டாடப்பட்டது.

இதையொட்டி, தலைநகர் மாஸ்கோவின் செஞ்சதுக்கத்தில் நடைபெற்ற இராணுவ அணிவகுப்பில் ஜனாதிபதி புடின் கலந்துகொண்டு வீரர்களிடையே எழுச்சி உரையாற்றினார்.

2 ஆம் உலகப் போரில் சோவியத் யூனியன் இழந்த 2.7 கோடி மக்களின் தியாகத்தை நினைவுகூரும் வெற்றி தினம், ரஷ்யர்களின் தேசப்பற்றை ஒருங்கிணைக்கும் மிக முக்கியமான நாளாகக் கருதப்படுகிறது. போர்ச்சூழல் மற்றும் பொருளாதாரத் தடைகளுக்கு மத்தியிலும், இந்த விழாவை ரஷ்யா தனது தேசிய பெருமையின் அடையாளமாகத் தொடர்ந்து முன்னெடுத்து வருகிறது.

எனினும், தற்போதைய போர்ச்சூழலில் உக்ரைனின் ட்ரோன் தாக்குதல் அச்சுறுத்தல் காரணமாக, இராணுவ பலத்தைப் பறைசாற்றும் பீரங்கிகள், ஏவுகணைகள் உள்ளிட்ட கனரக இராணுவத் தளவாடங்கள் இன்றி அணிவகுப்பு மிகவும் எளிமையாக நடத்தப்பட்டது. ஆனால், ரஷ்ய விமானப்படையின் போர் விமானங்கள் வானில் சாகசங்களை நிகழ்த்தி அணிவகுப்பை நிறைவு செய்தன.

நிகழ்வையொட்டி புடின் ஆற்றிய உரையில், உக்ரைனில் போரிட்டு வரும் ரஷ்ய வீரர்களை வெகுவாகப் பாராட்டினார். ‘நேட்டோ அமைப்பின் முழு ஆதரவுடன் செயல்படும் ஆக்கிரமிப்புச் சக்திகளுக்கு எதிராக ரஷ்ய வீரர்கள் ஒரு நியாயமான போரை நடத்தி வருகின்றனர். வெற்றி எப்போதும் நமக்கே உரித்தானது. நமது மனவலிமையும் ஒற்றுமையும் எந்தவொரு சவாலையும் முறியடிக்க உதவும்’ என்று அவர் கூறினார்.

இந்த ஆண்டு அணிவகுப்பின் சிறப்பம்சமாக, வடகொரிய இராணுவ வீரர்கள் முதல்முறையாக பங்கேற்றனர். ரஷ்யாவின் குர்ஸ்க் பகுதியில் உக்ரைன் நடத்திய ஊடுருவலை முறியடிக்க, ரஷ்ய படைகளுடன் இணைந்து வடகொரிய வீரர்கள் போரிட்டு வரும் நிலையில், அவர்களுக்கு மதிப்பளிக்கும் வகையில் இந்நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்த விழாவில் பெலாரஸ், கஜகஸ்தான், உஸ்பெகிஸ்தான், மலேசியா, லாவோஸ் ஆகிய பல்வேறு நாடுகளின் தலைவர்கள் பங்கேற்றனர். ஐரோப்பிய யூனியனைச் சேர்ந்த ஸ்லோவாகியா பிரதமர் ராபர்ட் ஃபிகோவும் மாஸ்கோ சென்றிருந்தார். அவர் அணிவகுப்பில் கலந்துகொள்ளாமல், போரில் உயிரிழந்த வீரர்களின் நினைவிடத்தில் அஞ்சலி செலுத்தினார். இவரின் மாஸ்கோ பயணத்தை ஜெர்மனி பிரதமர் ஃப்ரைட்ரிச் மெர்ஸ் கடுமையாக விமர்சித்துள்ளார்.

வெற்றி தினக் கொண்டாட்டங்களையொட்டி, மாஸ்கோவில் கடும் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டிருந்தன. இணைய மற்றும் குறுஞ்செய்தி சேவைகள் தற்காலிகமாக முடக்கப்பட்டன.









பக்கங்கள் - 05

கனடா முரசு

ஞாயிற்றுக்கிழமை 10/05/2026

## லிபரல் கட்சியினர் இடையே போட்டி!



C5





# கனேடியர்களில் மூன்றில் ஒரு பகுதியினர் எரிபொருள் விலை உயர்வால் பாதிப்பில்!

## நிதி நெருக்கடியை எதிர்கொள்கின்றனர்

ஈரானின் போர்ச் சூழலுக்கு மத்தியில் எரிபொருள் விலையேற்றம் மற்றும் பணவீக்கம் அதிகரித்து வருவதால், கடந்த ஒரு மாதத்தில் தங்களின் தனிப்பட்ட நிதிநிலை மோசமடைந்துள்ளதாக மூன்றில் ஒரு பங்கு கனேடியர்கள் தெரிவித்துள்ளனர் என்று புதிய கருத்துக்கணிப்பு கூறுகிறது.

தங்கள் நிதிநிலை மோசமடைந்துள்ளதாகக் குறிப்பிட்டவர்களில், ஆண்டிற்கு 50 ஆயிரம் டொலர் அல்லது அதற்கும் குறைவாக வருமானம் ஈட்டுபவர்கள் (40 சதவீதம்) மற்றும் அட்லாண்டிக் கனடாவில் வசிப்பவர்கள் (37 சதவீதம்) முதன்மையானவர்களாக உள்ளனர். கிழக்குக் கடற்கரை வாசிகளைத் தொடர்ந்து, பிரிட்டிஷ் கொலம்பியாவில் 35 சதவீதத்தினரும், அல்பேர்ட்டாவில் 34 சதவீதத்தினரும் நிதிநிலை சரிவைச் சந்தித்துள்ளனர்.

C2

# கனடாவில் வேலையின்மை உச்சத்தைத் தொடுகின்றது!

கனடாவின் வேலையின்மை விகிதம் கடந்த ஏப்ரல் மாதத்தில் 6.9 சதவீதமாக உயர்ந்து, கடந்த ஆறு மாதங்களில் இல்லாத உச்சத்தைத் தொட்டுள்ளதாக கனேடிய புள்ளி விவரவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அமெரிக்காவின் வரி விதிப்புகள், வர்த்தக நிச்சயமற்ற தன்மை மற்றும் சர்வதேச அரசியல் சூழல்களுக்கு மத்தியில் கனேடிய வேலைவாய்ப்பு சந்தை கடும் பின்னடைவைச் சந்தித்து வருகின்றது.

ஏப்ரல் மாதத்தில் 15,000 புதிய வேலைவாய்ப்புகள் உருவாகும் என ஆய்வாளர்கள் எதிர்பார்த்திருந்த




நிலையில், மாறாக 17,700 வேலை வாய்ப்புகள் இழக்கப்பட்டுள்ளன.

குறிப்பாக, முழுநேர வேலை வாய்ப்புத் துறையில் 46,700 பணியிடங்கள் பறிபோயுள்ளன.

இது பகுதிநேர வேலைவாய்ப்புகளில் ஏற்பட்ட 29,000 அதிகரிப்பால் ஓரளவுக்கு ஈடுசெய்யப்பட்டாலும், ஒட்டுமொத்த வேலைவாய்ப்பு சந்தையில் பலவீனம் தொடர்வதையே இது காட்டுகிறது.

பொருள்களை உற்பத்தி செய்யும் துறையில் ஏற்பட்ட 26,800 வேலை இழப்புகள், அமெரிக்க வர்த்தகக் கட்டுப்பாடுகளின் தாக்கத்தைப் பிரதிபலிக்கின்றன.

அதேவேளை, வேலை தேடுவோரின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதால் ‘பங்கேற்பு விகிதம்’ 65 சதவீதமாக உயர்ந்துள்ளது. மத்திய வயதுடையவர்கள் மற்றும் இளைஞர்களிடையேயான வேலையின்மை விகிதமும் முறையே 6 சதவீதம் மற்றும் 14.3 சதவீதமாக அதிகரித்துள்ளது.

C2



# விலைவாசி உயர்வைச் சமாளிக்க வழியின்றி தள்ளுபடிக் கடைகளை நாடும் கனேடியர்கள்

விலைவாசி உயர்வை எதிர்கொள்வதற்காக கனேடியர்கள் பலர் தள்ளுபடிக் கடைகளை நாடுகின்றனர் எனச் செய்திகள் வெளியாகியுள்ளன.

ஒரு காலத்தில், காலாவதி திகதி பார்த்து பொருள்கள் வாங்கும் நாட்டு மக்களில் கனேடியர்களை சேர்க்காமல் இருக்கமுடியாது.

ஆனால், இன்று, best-before திகதி முடிவடைந்திருந்தாலும், அதையும் வாங்கிப் பார்க்கலாமே என்னும் எண்ணம் கனேடியர்கள் பலருக்கு உருவாகியுள்ளது.

அதாவது, விலைவாசி உயர்வால், எந்தப் பொருள்கள், குறிப்பாக மளிகைப்பொருள்கள், விலை குறைவாகக் கிடைக்கும் என பார்த்து வாங்கத் தொடங்கியுள்ளார்கள் கனேடியர்கள்.

கனடாவில், Liquidation Marie போன்ற தள்ளுபடிக் கடைகளில் 50 சதவிகிதம் வரை குறைவான விலையில் மளிகைப்பொருள்கள் கிடைக்கின்றன.

ஆகவே, அத்தகைய தள்ளுபடிக் கடைகளை நாடும் கனேடியர்கள் எண்ணிக்கை அதிகரிக்க, அதற்கேற்ப கனடாவின் பல இடங்களில் தள்ளுபடிக் கடைகளின் கிளைகளின் எண்ணிக்கையும் அதிகரித்த வண்ணம் உள்ளது.

இந்ததள்ளுபடிக்கடைகளில்மளிகைப் பொருள்கள் விலை குறைவாகக் கிடைப்பதால், அவை தரமற்ற பொருட்கள் என்று கூறிவிட முடியாது.

அதாவது, பெரிய பல்பொருள் அங்காடிகள் தங்கள் தேவைக்கு அதிகமான பொருள்களை வாங்கிவிடும்போது, best-before திகதி முடிவடையை இருக்கும் பொருள்களை தள்ளிவிடும்போது, அவற்றையெல்லாம் இந்த தள்ளுபடிக் கடைகள் வாங்கி குறைந்த விலைக்கு விற்கின்றன.

மக்களும், தாங்கள் வழக்கமாக வாங்கும் அதே பொருள் இந்தக் கடைகளில் விலை குறைவாக கிடைப்பதால், அவற்றை வாங்க முட்டி மோதுகிறார்கள்.

ஆக, ஐந்து ஆண்டுகளுக்கு முன்வரை best-before திகதி முடிந்துவிட்டது, அந்தப் பொருள் வேண்டாம் என எண்ணிய கனேடியர்கள் பலர், இன்று, விலைவாசி காரணமாக, இந்தப் பொருள் விலை குறைவாக இருக்கிறதே, இதை வாங்கி பயன்படுத்திப் பார்க்கலாமே என யோசிக்கும் நிலை வந்துவிட்டது என்கிறார் துறைசார் நிபுணர் ஒருவர்.

**கனேடியர்களில்...**

(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இதற்கிடையில், கருத்துக்கணிப்பில் பங்கேற்றவர்களில் கிட்டத்தட்ட 80 சதவீதத்தினர் தங்களின் அல்லது தங்கள் குடும்பத்தின் அன்றாட நிதிநிலை குறித்து கவலையடைந்துள்ளனர்.

மேலும் 34 சதவீதத்தினர் தங்களின் அத்தியாவசியத் தேவைகளைப் பூர்த்தி செய்யப் போராட வேண்டியிருக்கும் என்று தெரிவித்துள்ளனர்.

வேலை இல்லாமை காரணமாகத் தங்களின் வேலை பறிபோகலாம் அல்லது தாங்கள் வேலையிலிருந்து நீக்கப்படலாம் என மொத்தம் 14 சதவீதத்தினர் நம்புகின்றனர். அத்துடன், தங்களுக்கோ அல்லது தங்கள் குடும்பத்திற்கோ தேவையான பொருள்களை வாங்கும் திறன் தங்களிடம் இருக்காது என்றும் அவர்கள் கூறியுள்ளனர்.

2022–ஆம் ஆண்டு கோடை காலத்திற்குப் பின்னர் என்றுமில்லாத அளவிற்கு, இந்தப் புதன்கிழமை எரிபொருள் விலை லீட்டருக்கு 10 சதங்கள் உயர்ந்து 195.9 சதங்களை எட்டும் என எதிர்பார்க்கப்படும் சூழலில் இந்த ஆய்வு முடிவுகள் வெளியாகியுள்ளன.

# டொரொண்டோ உலகத் தமிழ் ஆய்வு மாநாடு; CTCC Business Centre இல் நடந்த ஊடக சந்திப்பு













டொரொண்டோவில் நடைபெறவுள்ள உலகத் தமிழ் ஆய்வு மாநாடு 2026 தொடர்பான ஊடக சந்திப்பு CTCC Business Centre இல் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பல்வேறு அறிஞர்கள், சமூக அமைப்புகளின் பிரதிநிதிகள், ஊடகத்துறையினர் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டு மாநாட்டின் நோக்கங் கள் மற்றும் எதிர்பார்ப்புகள் குறித்து கருத்துகளை பகிர்ந்து கொண்டனர்.

“செய்யறிவு உலகில் செம்மொழித் தமிழும் தமிழரும்” என்ற தலைப்பில் நடைபெறவுள்ள உலகத் தமிழ் ஆய்வு மாநாடு 2026, ஒக்டோபர் 15 முதல் 18 வரை கனடாவின் டொரொண்டோ நகரில் நடைபெறவுள்ளது.

உலகின் பல பகுதிகளிலிருந்து தமிழ் அறிஞர்கள், ஆய்வாளர்கள், கல்வியாளர்கள் மற்றும் சமூக முன் னோடிகள் கலந்துகொண்டு தமிழ் மொழி, இலக்கியம், வரலாறு, பண்பாடு, பொருளாதாரம் மற்றும் செய்யறிவு தொழில்நுட்ப வளர்ச்சி ஆகிய துறைகளில் ஆய்வுகளையும் கருத்தரங்குகளையும் முன்னெடுக்க உள்ளனர்.

இந்த ஊடக சந்திப்பின் போது, மாநாட்டின் முக்கிய அம்சங்கள், ஆய்வுக் கட்டுரை சமர்ப்பிப்பு நடைமுறைகள், உலகத் தமிழர் பங்களிப்பு மற்றும் இளம் தலைமுறையினரின் ஈடுபாட்டின் அவசியம் ஆகியவை தொடர்பில் விரிவாக விளக்கப்பட்டன.

மேலும், இலங்கை மற்றும் இந்தியா விலிருந்து தேர்வு செய்யப்படும் ஆய்வாளர் களுக்கு இருவழி விமானச் செலவும் தங்குமிட வசதியும் வழங்கப்படும் என ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

மாநாட்டிற்கான ஆய்வுச் சுருக்கங் களை மே 25, 2026 இற்குள் சமர்ப்பிக் கலாம் என்றும் அனைத்து கட்டுரைகளும் நிபுணர் குழுவினரால் மதிப்பாய்வு செய்யப்படும் எனவும் அறிவிக்கப்பட்டது.




# ஒன்றாரியோவில் அமைக்கப்படுகின்றது உலகின் மிகப்பெரிய அணுமின் நிலையம்

ஒன்றாரியோவின் முதைஉயசனநைந இல் உள்ள Bruce Power தளத்தில், ஒரு புதிய அணுமின் நிலையத்தின் கட்டுமானப் பணிகளை முன்னெடுப்பதற்காக 300 மில்லியன் டொலர் ஒப்பந்தத்தை ஒன்றாரியோ மாகாண அரசாங்கம் செயற்படுத்தி வருவதாகக் கூறப்படுகிறது.

ஒன்றாரியோவின் மின்சாரச் சந்தையை இயக்குவதற்குப் பொறுப்பான அரச நிறுவனமான Independent Electricity System Operator (IESO) மற்றும் Bruce Power ஆகியவற்றுக்கு இடையிலான 'Bruce C' என்று அழைக்கப்படும் ஒப்பந்தத்தின் புதிய திட்டத்தின் கட்டுமானப் பணிகளுக்கான அடித்தளத்தை அமைக்கவுள்ளது.

அணுமின் நிலையத்தை உலகின் மிகப்பெரிய அணுமின் உற்பத்தி நிலையமாக மாற்றும் இலக்கை நோக்கிய ஒரு முக்கியமான தொடக்கமே இந்த ஒப்பந்தம் என்று அரசாங்கம் கூறுகிறது. மேலும், இது 30 ஆண்டுகளுக்கும் அதிகமான காலத்தின் பின்னர் ஒன்றாரியோவில் மேற்கொள்ளப்படும் முதலாவது பெரியளவிலான அணுசக்தித் திட்டமாகும்.

Bruce C திட்டம் நீண்ட காலத்திற்கு வேலைவாய்ப்பை மேம்படுத்துவதுடன், ஆண்டுக்கு 18,900 புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்கும்.

Bruce Power நிறுவனத்தை உலகின் மிகப்பெரிய அணுமின் உற்பத்தி நிலையமா. இத்திட்டம் மாற்றும் என்று ஒன்றாரியோ எரிசக்தி அமைச்சர் ஸ்டீபன் லீஸ் தெரிவித்தார்.

தற்போது ஒன்றாரியோவின் மின்சார விநியோகத்தில் சுமார் 50 சதவீதம் அணுசக்தி மூலம் கிடைக்கிறது. மாகாணத்தின் நீண்ட கால எரிசக்தி உத்தியின் ஒரு பகுதியாக, முதல்வர் போர்ட்டின் அரசாங்கம் அணுசக்திக்கு இரட்டிப்பு முக்கியத்துவம் அளித்துள்ளது. இதன் ஒரு கட்டமாக, பிக்கரிங் மற்றும் டார்லிங்டன் ஆகிய இடங்களில் உள்ள தற்போதைய அணுமின் நிலையங்களின் ஆயுள் காலத்தையும் அரசாங்கம் நீடித்துள்ளது.

# கனடாவிற்குள் பிளவுகளை தூண்ட முயல்கிறது ரஷ்யா

## அல்பேர்ட்டாவில் பிரிவினைவாத பிரசாரத்துக்கு ஊக்குவிப்பாம்

கனடாவில் வெளிநாட்டினரின் தலையீடு குறித்த கவலைகளை இப்போது வெளியாகியுள்ள ஒரு புதிய அறிக்கை எழுப்பியுள்ளது.

குறிப்பாக, அல்பேர்ட்டாவில் பிரிவினைவாதம் தொடர்பான விவாதங்கள், ரஷ்யா போன்ற நாடுகளுடன் தொடர்புடைய இணையவழி பிரச்சாரங்களின் இலக்காக மாறி வருகின்றன என ஆராய்ச்சியாளர்கள் எச்சரிக்கின்றனர்.

இந்த ஆய்வின்படி, அல்பேர்ட்டாவில் பிரிவினைவாதத்தை ஊக்குவிக்கும் வெளிநாட்டுத் தொடர்பு கொண்ட பதிவுகள் பெருமளவில் அதிகரித்துள்ளன. இதில் அல்பேர்ட்டாவின் சுதந்திரம், கனடாவின் வீழ்ச்சி மற்றும் அந்த மாகாணம் அமெரிக்காவுடன் இணைவது போன்ற செய்திகள் பரப்பப்படுகின்றன. இவற்றில் பெரும்பாலானவை, உள்ளூர் மக்களின் உரையாடல்களோடு இயல்பாகக் கலந்து, சமூக ஊடகங்கள் வழியாகப் பரவும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளன.

Regina பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் Brian McQuinn என்பவரின் கருத்



துப்படி, இத்தந்திரங்கள் மிக ரகசியமானவை. ரஷ்யத் தரப்பிலிருந்து பரப்பப்படும் தவறான தகவல்களில் 83 வீதம் சாதாரண கனேடியர்களாலேயே பகிரப்படுகின்றன. மக்கள் தங்கள் நம்பிக்கைகளுடன் ஒத்துப்போகும் இத்தகவல்களைத் தீவிரமாக ஆய்வு செய்யாது இயல்பாக மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்கின்றனர்.

டிசெம்பர் 2025 முதல் ஏப்பிரல் 2026 வரையான காலப்பகுதியில், அல்பேர்ட்டா பிரிவினைவாதம் என்பது அறியப்பட்ட தவறான தகவல் பரப்பும் வலைப் பின்னல்களில் மிக முக்கியமான கனேடியத் தலைப்புகளில் ஒன்றாக மாறியுள்ளதாக அந்த அறிக்கை கண்டறிந்துள்ளது. அரசியல் பிளவுகளைத் தூண்டுவதற்காக இந்த ஒருங்கிணைந்த பதிவுகள் பகிரப்படுகின்றன.

இது குறித்து McQuinn கூறுகையில், "அவர்கள் இணையத்தில் இரு தரப்பிலும் இருந்து கொண்டு, மோதலைத் தீவிரப்படுத்துவார்கள். கருத்து வேறுபாடு கொண்டவர்களை நாட்டுக்கே ஆபத்தானவர்களாகக் காட்டும் வகையில் மொழியை வன்முறையாக மாற்றுவதே அவர்களின் வேலை" என்று கூறியமையுடன், கடந்த சில மாதங்களாக அல்பேர்ட்டா பிரிவினைவாதம் மீதான கவனம் கடுமையாக அதிகரித்துள்ளதாக அவர் மேலும் கூறினார்.

சமூக ஒற்றுமையைச் சிதைப்பதற்கான ஒரு பரந்த, நீண்டகால முயற்சியின் ஒரு பகுதியே இந்தச் செயற்பாடுகள் என்று ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர்.

இது குறித்து McQuinn கூறும் போது "இது ஒரு வாக்கெடுப்பைப் பற்றியது மட்டுமல்ல, 10, 20 அல்லது 30 ஆண்டு கால நீண்ட காலப்பகுதியில் கனடாவிற்குள் இருக்கும் ஒற்றுமையைக் குறைப்பதற்காக ரஷ்யா எடுக்கும் முயற்சியாகும்" – என்றார்.

# லிபரல் கட்சியினர் இடையே போட்டி!

இடைத்தேர்தல் வேட்பாளரைத் தேர்வு செய்வதில் ஒன்றாரியோவின் லிபரல் கட்சியினர் போட்டி நிலையில் உள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

சில வேட்பாளர்கள் ஒருவருக்கொருவர் சாடிக்கொண்டதோடு, ஏனையவர்கள் பற்றியும் குறை கூறிய ஒன்றாரியோவின் லிபரல் கட்சி வேட்பாளர் தெரிவுப் போட்டி, வரவிருக்கும் இடைத்தேர்தலுக்கான தங்கள் தெரிவை கட்சி உறுப்பினர்கள் சனிக்கிழமையன்று முடிவு செய்ய உள்ள நிலையில் உச்சகட்டத்தை எட்டியுள்ளது.

Scarborough Southwest தொகுதியின் முன்னாள் மாகாணசபை உறுப்பினர் மத்திய அரசியலில் வெற்றிகரமாக இணைந்ததைத் தொடர்ந்து, அத்தொகுதி தற்போது வெற்றிடமாக உள்ளது. இடைத் தேர்தலுக்கான அறிவிப்பு இன்னும் வெளியாகாத நிலையிலும், லிபரல் கட்சி வேட்பாளர் பதவிக்கான போட்டி ஏற்கனவே தீவிரமடைந்துள்ளது.

தற்போது Beaches-East York தொகுதி நாடாளுமன்ற உறுப்பினராக இருக்கும் Nate Erskine-Smith, ஒன்றாரியோ லிபரல் கட்சித் தலைவர்



பதவிக்கு இரண்டாவது முறையாகவும் போட்டியிட விரும்புகின்றமையால் கடும் விமர்சனங்களை எதிர்கொண்டுள்ளார்.

இடைக்காலத் தலைவர் கூறியுள்ளபடி, Erskine-Smith உடன் சேர்ந்து லிபரல் கட்சித் தலைமைப் பதவிக்கு போட்டியிட ஆர்வமுள்ள ஏனைய வேட்பாளர்களில், கட்சியின் மத்தியகுழு உறுப்பினர்களான Lee Fairclough மற்றும் Rob Cerjane, முன்னாள் மத்திய அமைச்சரவை அமைச்சர் யேனநநி Bains மற்றும் வீட்டுவசதி ஆலோசகர் Eric Lombardi ஆகியோர் அடங்குவர். இவர்களை விட முன்னாள் அரசியல் உதவியாளர் Dylan Marando கடந்த மாதம் அதிகாரப்பூர்வமாக இந்தப் போட்டியில் முதலில் நுழைந்தார்.

இந்த ஆண்டு தொடக்கத்தில் இராஜினாமா செய்த Bonnie Crombieக்கு பதிலாக வெற்றி பெறுபவர் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்படுவார். இவர் கட்சியின் நான்காவது தலைவராக இருப்பார்.

இந்த வேட்பாளர் தெரிவுப் போட்டியில் பல மோதல்கள் இருந்தாலும், அது வழக்கத்திற்கு மாறானது அல்ல என்று இடைக்கால லிபரல் தலைவர் John Fraser கூறினார்.

இதனிடையே, வேட்பாளர் தெரிவில் வெற்றி பெறுபவர் ஓகஸ்ட் மாதத்திற்குள் அறிவிக்கப்பட வேண்டிய இடைத்தேர்தலில் தனது கவனத்தைச் செலுத்துவார். என்.டி.பி. கட்சி அந்தத் தொகுதியில் ஏற்கனவே மத்திய தேர்தலில் போட்டியிட்ட Fatima Shaban என்பவரை வேட்பாளராக நிறுத்தியுள்ளது. அதே நேரம், முற்போக்கு கொன்ஸர்வேட்டிவ் கட்சி இன்னும் வேட்பாளரை அறிவிக்கவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

# முக்கிய கட்டத்தை இப்போது எட்டியுள்ளது கனடா – அமெ. எண்ணெய் குழாய் திட்டம்

வட அமெரிக்காவின் எரிசக்தி துறையில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும் கனடா – அமெரிக்கா எண்ணெய்க் குழாய் திட்டம் தற்போது முக்கியமான ஒப்பந்த நிலையை எட்டியுள்ளது.

கனடாவில் இருந்து அமெரிக்காவிற்கு மசகு எண்ணெய் கொண்டு செல்லும் புதிய குழாய் திட்டம், South Bow Corp (கனடா) மற்றும் Bridger Pipeline (அமெரிக்கா) இணைந்து முன்னெடுத்து வரும் முயற்சியாகும்.

இந்த திட்டம், எண்ணெய் உற்பத்தியாளர்களிடமிருந்து நீண்டகால ஒப்பந்தங்களைப் பெறும் நிலையில் உள்ளது.

இந்த குழாய், Enbridge நிறுவனத்தின் ஆதரவுடன், தினமும் 200,000 பரல் மசகு எண்ணெயை மேற்குக் கனடாவில் இருந்து அமெரிக்க சந்தைகளுக்கு கொண்டு செல்லும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. இதனால், கனடாவின் எண்ணெய் ஏற்றுமதி 12 சதவீதம் அதிகரிக்கும் வாய்ப்பு உள்ளது.

இத்திட்டத்தின் முன்னேற்றம், முதலீட்டாளர்கள் மற்றும் அரசியல் வட்டாரங்களில் பெரும் கவனத்தை ஈர்த்துள்ளது.

குறிப்பாக, எரிசக்தி தேவைகள் அதிகரித்து வரும் சூழலில், இந்தல் குழாய் திட்டம் இரு நாடுகளுக்கும்



பொருளாதார நன்மைகளை வழங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அமெரிக்காவின் எரிசக்தி பாதுகாப்பை வலுப்படுத்தும் வகையில், கனடாவின் எண்ணெய் வளங்களை சீரான முறையில் கொண்டு செல்லும் திறன் இந்த திட்டத்திற்கு உள்ளது.

இதனால், உலகளாவிய எண்ணெய் சந்தையில் விலை நிலைத்தன்மை ஏற்படும் வாய்ப்பும் உள்ளது.

மேலும், இத்திட்டம் சுற்றுச்சூழல் மற்றும் பாதுகாப்பு தொடர்பான சவால்களை எதிர்கொள்ள வேண்டிய நிலை உள்ளது. சில சுற்றுச்சூழல் அமைப்புகள், இந்தக் குழாய்த் திட்டம் இயற்கை வளங்களை பாதிக்கக்கூடும் என்று எச்சரிக்கை விடுத்துள்ளன. எனினும், திட்ட நிர்வாகிகள், பாதுகாப்பு மற்றும் சுற்றுச்சூழல் தரநிலைகளை பின்பற்றி தாங்கள் செயல்படுகின்றனர் என உறுதியளித்துள்ளனர்.

இந்த முக்கிய ஒப்பந்தக் கட்டத்தை எட்டியுள்ளதால், திட்டம் விரைவில் நிறைவேற்றப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.